ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

18.12.2025

1. கண்டேன் கலியினில் அற்புதத்தை
கந்தனும் பிரணவக் குடிலினில்
தொண்டராக இணைந்த யாவர்க்கும்
துணைவந்து காத்து அருள்புரிவதை

2. அருள்புரியும் ஆறுமுகக் கடவுளும்
அரங்கனென்னை தன்னுள் ஏற்று
அருள்செய் மக்களுக்கு என கட்டளையிட
அருட்சுவடி வழி அரங்கனும் பேசுகின்றேன்

3. அரங்கனும் விசுவாவசு சிலை திங்கள்
அறிவிப்பேன் முதல் குருவார அருளாசி
வரங்களாக மக்கட்கு உரைப்பேன்
வடிவேலனாருடன் அரங்கன் யானும் அருளும்

4. அருளும் பிரணவக் குடில் தன்னில்
அபயமென வந்து சேர்பவர்க்கு
அருளும் பொருளும் வரமாகக் கிட்டி
ஆரோக்கியம் ஆயுள்பலமும் கூடி

5. கூடியே வாழுகின்ற காலமே
குறைவிலா கல்வி கேள்வி ஞானமும்
நாடியே தன் பிறவி நோக்கமும்
நன்கறிந்து தருமத்தின் சூட்சுமமும்

6. சூட்சுமமுடன் தயவுநிலை கூடி
சுப்பிரமண்ய ஞான அறிவும்
மாட்சிமைமிக்க தெளிவு திடமும்
மரணம் வெல்லும் ஆற்றலும் அடைவர்

7. அடையவே அனைத்துக்கும் மூலம்
அடிப்படை அன்னதானமே எனும்
தடையற தரும வழிகள் கண்டு
தானாக முன்வந்து தருமமிடும்

8. தருமமிடும் ஆற்றலும் பெருகி
தரணியில் தருமம் புரிந்திடுவர்
பெருமைபட முருகப் பெருமானே
பிரசாதமாக பிரணவக்குடிலில் தரும்

9. தருகின்ற அருளமுதை உண்டு
தக்கபடி அவரவரும் அணுகி
தருகின்றேன் பொருளுதவி என
தவராஜன் என் குடிலில் அன்னமிட

10. அன்னமிட பல பிறவி செய்துவந்த
அனைத்து தருமங்களும் சேர்ந்து
அன்னதான மகா பலமாக மாறி
அகிலத்தில் தருமவான் எனும் அடையாளம்பட

11. அடையாளம்பட ஞானிகள் ஆசிகூடி
அனைத்து காரியங்களிலும் வெற்றி
தடையின்றி கண்டு சிறப்பர்
தருமவானாய் தவசியாய் வாழ்ந்து பெரும்பேறடைவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி